## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி
## அ.வ.எண். 25/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரமேஷ் | மதம் | : |
| த/பெ | : சிவலிங்கம் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

12.08.2024

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் உறுத்துக்கட்டளைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அமிர்தம்மாள், பாஞ்சாலை, ராஜாத்தி ஆகியோர்கள் என் மாமனார் இறந்ததில் இருந்து பிரச்சனை செய்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். அமிர்தம்மாள், பாஞ்சாலை, ராஜாத்தி ஆகியோர்கள் பிரச்சனை செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்துஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

2. எதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இதுவரை நான்தான் பயிர் செய்து வந்தேன் அவர்கள் பிரச்சனை செய்வதால் Stay order வாங்க வழக்கு தாக்கல் செய்தேன். யார் யார் மீது எதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பாஞ்சாலை, ராஜாத்தி, முனியம்மாள், ராணி ஆகியோர் நான் பயிர் வைக்கும்போது பிரச்சனை செய்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்துக்கள் என் மாமனார் கணேசன் பெயரிலுள்ள பாகம் பிரிக்கப்படாத கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றால் 1975லேயே பாகம் பிரித்துவிட்டார்கள். பாகம் வாய்மொழியாக பிரிக்கப்பட்டதா அல்லது ஆவணம் மூலம் பிரிக்கப்பட்டதா என்றால் ஆவணம் மூலம் பிரிக்கப்பட்டது. ஆவணம் எதுவும் எழுதப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் புல எண், விஸ்தீரணம், நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் புல எண்.215/1, விஸ்தீரணம் 33 செண்ட், புல எண்.223/7, விஸ்தீரணம் 34 செண்ட், புல எண்.267/12, விஸ்தீரணம் 38 செண்ட், புல எண்.268/9, விஸ்தீரணம் 63

செண்ட், புல எண்.269/11 விஸ்தீரணம் 72 செண்ட், புல எண்.269/12, விஸ்தீரணம் 30 செண்ட், புல எண்.269/13, விஸ்தீரணம் 33 செண்ட், புல எண்.269/14, விஸ்தீரணம் 59 செண்ட், புல எண்.269/15, விஸ்தீரணம் 35 செண்ட், புல எண்.215/9, விஸ்தீரணம் 52 செண்ட், புல எண்.223/6, விஸ்தீரணம் 5 செண்ட்டில் 2/3 பாகம் ஆகும்.

3. மேற்படி சொத்துக்களின் நான்கு பக்க எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நடேசன் சுய சம்பாத்தியத்தில் மேற்படி சொத்துக்களை வாங்கினார் என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகள் ராணியம்மாள், கஸ்தூரி, முனியம்மாள் ஆகியோர் நடேசனின் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். ராஜாத்தி, பாலாஜி ஆகியோர் நடேசனின் அண்ணன் மணி ரெட்டியாரின் வாரிசுகள் என்றால் சரிதான். பாஞ்சாலை மணி ரெட்டியாரின் மனைவி என்றால் சரிதான். குப்பா ரெட்டியின் மகன்தான் என் மாமனார் நடேசன் என்றால் சரிதான். நடேசனின் அம்மா பெயர் அமிர்தம்மாள் என்றால் சரிதான். குப்பா ரெட்டி அமிர்தம்மாளின் மக்கள்தான் ராணியம்மாள், கஸ்தூரி, முனியம்மாள், நடேசன், மணி ரெட்டியார் மற்றும் ஒரு பாமா ரெட்டியார் என்றால் சரிதான்.

4. நடேசன் கூட்டுக் குடும்ப மேலாளராக இருந்தார் என்றால் தவறு. மணி ரெட்டியார், பாமா ரெட்டியார் மட்டும்தான் கூட்டு குடும்ப மேலாளராக இருந்தனர். நடேச ரெட்டி 1995 ல் இறந்து விட்டார். நடேச ரெட்டியார் இறப்பதற்கு முன்பு வரை கூட்டுக் குடும்ப மேலாளராக இருந்தார் என்றால் 1975 லேயே சொத்தை பிரித்துவிட்டார்கள். நான் சொல்வது பொய் என்றாலும் அவ்வாறு சொத்து பிரிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும் குப்பனின் வாரிசுகள் அனைவரும் ேசேர்ந்து சம்பாதித்து நடேசன் பெயரில் வாங்கப்பட்டவை என்றாலும் சரியல்ல.

5. நடேசன் பெயரிலுள்ள அசல் கிரைய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 1995 ல் நடேச ரெட்டி இறந்த பின்பு 1997 ல் பாமா ரெட்டி அசல் ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு 1997 ல் பாமா ரெட்டி அசல் ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார் என்று கூறுவதற்கு ஆதரவாக என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இது கூட்டுக் குடும்ப சொத்து என்பதால்தான் என்னிடம் ஆவணம் எதுவும் இல்லை

என்றாலும் அமிர்த்தம்மாளிடம்தான் அசல் ஆவணங்கள் உள்ளது என்றாலும் எங்கள் பீரோவில் இருந்த அசல் ஆவணங்களை பீரோவை உடைத்து எடுத்து சென்றுவிட்டார்.

6. 1997 ல் பாமா ரெட்டி அசல் ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார் என்று முதலில் கூறிவிட்டு தற்போது பீரோவை உடைத்து ஆவணங்களை எடுத்து சென்றதாக முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் நான் மாற்றி கூறவில்லை. நடேசன் இறந்த தேதி என்ன என்றால் 17.06.1995 ஆகும். நடேசனின் அசல் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நடேசனின் வாரிசு சான்றிதழ் எப்போது யாரால் வாங்கப்பட்டது என்றால் என் மாமியார் 2012 ல் வாங்கினார்.

7. நான் சொல்வது தவறு என்றாலும் 2014 ல் முனியம்மாள்தான் வாங்கியுள்ளார் என்றால் 2012 ல் இருந்து 2014 க்குள் வாங்கியிருப்பார்கள். என் மாமியார் முனியம்மாள் எழுதப்படிக்க தெரியாது மற்றும் காது கேட்காது என்றால் சரிதான். என் மாமியார் முனியம்மாள் எழுதப்படிக்க தெரியாது மற்றும் காது கேட்காது என்பதால் நான்தான் வாரிசு சான்றிதழ் வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நடேசனின் அசல் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நடேசனின் அசல் வாரிசு சான்றிதழ் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியாது.

8. நடேசனின் வாரிசுகளாக தாயார் அமிர்த்தம்மாள், மனைவி முனியம்மாள், மகள்கள் ஜெயந்தி, பாரதி மகன் சதீஷ் என்றால் சரிதான். சதீஷ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் வாரிசு சான்றிதழ் வாங்கும் போது நடேசனின் அம்மா உயிருடன் தான் இருந்தார் என்றால் இருந்தார்கள். வாரிசு சான்றிதழில் அமிர்தம்மாளை சேர்க்கவில்லை என்றால் சுய சம்பாத்திய சொத்து என்பதால் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். சுய சம்பாத்திய சொத்து என்றாலும் தாயார் ஒரு வாரிசாக வருவார் என்றால் அமிர்தம்மாளிடம் கேட்டதற்கு நடேசனின் சுய சொத்து என்பதால் நீங்களே வாரிசு சான்றிதழ் வாங்கி கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கூட்டு குடும்ப சொத்து என்பதால் அமிர்தம்மாள் கையெழுத்து போட மாட்டார் என்பதற்காக அவரை மறைத்து வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

9. நான் வேண்டுமென்றே அமிர்தம்மாளை வாரிசு சான்றிதழில் சேர்க்காதது

சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 2003 ஆகும். என் மனைவி பெயர் பாரதி என்றால் சரிதான். நான் காதலித்து திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். நான் சொத்துக்களுக்காக ஆசைப்பட்டு திருமணம் செய்தேன் என்றால் இல்லை. நான் MRF நிறுவனத்தில் பணி செய்கிறேன் என்றால் சரிதான். நான் வேலை நேரம் தவிர மீதி நேரத்தில் மகிழுந்து (CAR) வாங்கி விற்கும் தொழிலும் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழிலும் செய்து வருகிறேன் என்றாலும் இல்லை. வட்டிக்கு பணம் கொடுக்கும் போது சார் பதிவாளர் அலுவலகத்தில் சொத்துக்கள் மீது கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் அது தவறானது.

10. சொத்துக்களை வாங்குவது, விற்பது ஆவணங்களை சரி பார்ப்பது பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் இல்லை. இதே நீதிமன்றத்தில் என் மனைவி அ.வ.எண்.27/2021 ல் பாலாஜி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பொய். அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் பட்டா எண் சொல்ல முடியுமா என்றால் என் மனைவி பெயரில் உள்ள பட்டா எண்.2136 ஆகும். அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பட்டா எண்.397, புல எண்.216/16 என்றாலும் அந்த வழக்கையும் பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து என் மனைவி மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

11. புல எண்.251/1ல் 97 சென்ட்டை கிரையம் பெற நான் முயற்சி செய்தேன் என்றால் சரிதான். அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றால் இல்லை. அந்த பதிவு ஆவணம் அனைத்தும் தயார் செய்து கிரையம் பெற பதிவு செய்ய சென்றபோது சார்பதிவாளர் பொய்யான ஆட்கள் என்று எங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார் என்றால் பொய்யானது ஆகும். மேற்படி கிரையத்திலும் நான்தான் மூளையாக செயல்பட்டேன் என்றால் பொய்யானதாகும். மேற்படி சம்பவம் தொடர்பாக திருத்தணி காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதியப்பட்டது என்றால் அது பொய்யானது ஆகும். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பொய்யான தகவல் கொடுத்து பெற்ற வாரிசு சான்றிதழ் செல்லத்தத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

12. பொய்யான வாரிசு சான்றிதழின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போதும் அமிர்தம்மாளிடம் சாட்சி கையெழுத்து

கூட பெறவில்லை என்றால் நடேச ரெட்டி சுயமாக வாங்கியது என்பதால் நீங்கள் வைத்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். என் மனைவி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய உடன் என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டதற்கான காரணம் சொல்ல முடியுமா என்றால் ஒரு பிரியத்தில் எழுதினார்.

13. 2, 3 ஆவணங்கள் ஏற்படுத்திவிட்டால் சொத்துக்களை எதுவும் செய்ய முடியாது என்பதற்காக என்னால் பொய்யாக ஆவண்ங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அமிர்தம்மாளின் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் பங்குள்ளது என்பதால்தான் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளோம் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக மாற்றி மாற்றி ் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று தெரிந்தும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ள இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. அமிர்தம்மாளுக்கு சொத்தில் முழு உரிமையுள்ளது என்றாலும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோர முடியாது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)